**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.13/2023**

**தேதி: 29.08.2025**

பெயர் : அனுசுயா (வா.சா.1) க/பெ: குலோத்துங்கன்

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை..**

1.நான் 5 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய வழக்கிற்கு பிரதிவாதிகள் என்ன எதிர்கட்சி செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரையை மறுத்து நான் கூடுதல்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.நான் சொல்வது பொய் கூடுதல் வழக்குரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து புஞ்சை நிலமா அல்லது நஞ்சை நிலமா, நத்தம் நிலமா என்றால் வீடாகும்.எனக்கும் என் கணவருக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1984 ம் வருடம் ஆகும். திருமணம் நடந்த பிறகு நான் எந்த ஊரில் குடும்பம் நடத்தினேன் என்றால் திருமணமாகி 6 வருடம் நான் செங்காட்டுப்பட்டி கிராமத்தில் குடியிருந்தேன். அதன்பிறகு கோயம்புத்துாருக்கு வேலை விசயமாக சென்றுவிட்டோம். தற்போதுவரை கோயம்புத்துாரில்தான் இருந்து வருகிறோம் என்றால் இல்லை. ஒன்றாகதான் இருக்கிறோம்.

2. என்னுடைய வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் கோயம்புத்துாரில் வசிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிறந்தது செங்காட்டுப்பட்டி கிராமமா என்றால் நான் பிறந்த ஊர் கேராளா மாநிலம், கோழிக்கோடு ஆகும். என் திருமணத்திற்கு முன்பு என் கணவரைப்பற்றியும் அவரின் குடும்பத்தாரைப் பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.என் கணவருக்கு தாவா சொத்து எந்தவகையில் பாத்தியப்பட்டது என தெரியுமா என்றால் என் கணவரின் தாத்தா நல்லப்பரெட்டியார் என் மாமனார் ரெங்கசாமிரெட்டியாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார். அந்தவகையில் தாவா சொத்து என் கணவருக்கு பாத்தியப்பட்டதாகும். ரெங்கசாமிரெட்டியாருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணமாக

எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் தாவா சொத்து ரெங்கசாமிரெட்டியாருக்கு சுயசொத்து என்றால் இல்லை. 4 பேருக்கு பாத்தியப்பட்டதாகும். எதிர்வழக்குரையில் என் கணவருக்கு ஏற்கனவே திருமணம் நடந்ததாக தெரிவித்துள்ளதை மறுத்து நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்தான் என் கணவருக்கு முதல் மனைவி ஆவேன். என் கணவர் 1982 ல் திருமணம் செய்ததால் என் கணவருக்கு ரூ.1000/- பணம் கொடுக்கப்பட்டு அவர் தனது பாக உரிமை குறித்து விடுதலைஆவணம் எழுதிக்கொடுத்து பதிவு செய்யப்பட்டதாக பதிலுரையில் தெரிவித்துள்ளதை மறுத்து நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோயம்புத்துார் சென்றபிறகு கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். கூட்டுக்குடும்பமாக வசித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்படி 15.09.2025 ம்தேதி ஒத்திவைக்கப்படுகிறது.**

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்